ஊடக அறிவித்தல் - இல – 23

தேர்தல் ஆணைக்குழு

பாராளுமன்றத் தேர்தல் - 2020

## அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல்

அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்றல் தொடர்பாக வெளியிடப்பட்ட 2020.03.17 ஆம் திகதிய ஊடக அறிவித்தல் இல 18 உடன் தொடர்புடையது (வசதி கருதி அதன் ஒரு பிரதி இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.)

ஏற்கனவே அஞ்சல் மாஅதிபர் அவர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை 2020.04.27 ஆம் திகதியாகும் போது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு வழங்குவதற்குத் அஞ்சல் மாஅதிபர் அவர்களால் நடவடிக்கையெடுக்கப்படும். அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்கும் இறுதித் தினமாக விதிக்கப்பட்டிருந்த 2020.03.17 ஆம் திகதியாகும் போது அந்தந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்றிருந்த அனைத்து விண்ணப்பங்களையும் **2020.04.28 ஆம் திகதி பி.ப 4.00 மணிக்கு முன்னர் அல்லது அதற்கு முன்னர் குறித்த அலுவலகம்/** அரச நிறுவனம் அமையப்பெற்றுள்ள மாவட்டத்தின் மாவட்ட செயலகம், மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் அல்லது இராஜகிரிய தேர்தல்கள் செயலகத்திற்கு முகப்புக் கடிதமொன்று சகிதம் நேரில் எடுத்து வந்து கையளிப்பதற்கு அந்தந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இவ்வறிவித்தலை அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கோரும் புதிய அறிவித்தலொன்றாகவோ அல்லது விண்ணப்பங்களைக் கையேற்கும் புதிய தினமொன்றை விதித்தலொன்றாகவோ கருதக் கூடாதென மேலும் அறிவித்துக் கொள்ளப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
தேர்தல் ஆணைக்குழு சார்பாக.

தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2020.04.23